**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**
**Case No: CC.182/2022**
**Prosecution Witnesses : 1**

| | | | |
|---|---|---|---|
| Name | : **கணேசன்** | Caste | : |
| Father 's Name / Husband Name | : **சந்தனம்** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு உதவி வழக்கறிஞர் ஆஜர்)
**(09.03.2026)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது மேலஉரப்பனூரில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். எனக்கு தேதி சரியாக ஞாபகம் இல்லை. சுமார் 5 வருடங்கள் இருக்கும் . நான் இரவு வீட்டில் தூங்கி கொண்டிருந்த போது அதிகாலை 4.30 மணிக்கு சத்தம் கேட்டு வெளியே வந்து பார்த்தேன். யாரோ சிலர் என்னை தள்ளிவிட்டார்கள். அதில் எனக்கு தலையில் காயம் ஏற்பட்டது. சிகிச்சைக்காக திருமங்கலம் அரசு மருத்துவமனைக்கு சென்றேன். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள. அவர்களிடம் சம்பவம் தொடர்பாக நடந்த விபரங்களை கூறினேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் கொடுத்தது தான். அதில் உள்ள புகார்தாரர் கையொப்பம் என்னுடையது தான். **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** நான் எதிரிகளுடன் சமாதானமாக சென்றுவிட்டேன். என்னிடம் காட்டப்படும் சமாதான மனுவின் பாதிக்கப்பட்ட தரப்பு எனும் இடத்தில் உள்ள 1வது கையொப்பம் என்னுடையது தான். அதை நான் எதிரிகளுடன் சமாதானமாக செல்வதற்காக செய்து கொடுத்தேன்.

**சமாதான மனு அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**அரசுதரப்பில் சாட்சி பிறழ்சாட்சியாக கோரப்பட்டு அனுமதி அளித்ததின் பேரில் கு.வி**

ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அவர்கள் எனது உறவினர்கள் ஆவார். நான் போலிசார் விசாரணையின் போது கடந்த 22.07.2020 தேதி மாலை 4.30 மணியளவில் மேலஉரப்பனூர் மந்தையில் நான் உட்கார்ந்திருந்த போது எதிரிகள் இருவரும் என்னை தகாத வார்த்தைகளால்பேசி தாக்கி காயத்தை ஏற்படுத்திவிட்டு கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்று போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகள் எனது உறவினர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் கு.வி,**இல்லை

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**
**Case No: CC.182/2022**
**Prosecution Witnesses : 2**

| | | | |
|---|---|---|---|
| Name | : **ஆனந்தி** | Caste | : |
| Father 's Name / Husband Name | : **கணேசன்** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு உதவி வழக்கறிஞர் ஆஜர்)
**(09.03.2026)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது மேலஉரப்பனுரில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். சுமார் 5 வருடங்கள் இருக்கும் தேதி சரியாக ஞாபகம் இல்லை. 4.30 மணியளவில் எனது கணவர் கணேசன் காயத்துடன் வீட்டிற்கு வந்தார் . சிலர் அடித்துவிட்டதாக சொன்னார். யார் அடித்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது. தற்போது எதிரிகளுடன் நாங்கள் சமாதானமாக போய் விட்டோம். அவ ர்கள் எனது உறவினர்கள் தான். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**அரசுதரப்பில் சாட்சி பிறழ்சாட்சியாக கோரப்பட்டு அனுமதி அளித்ததின் பேரில் கு.வி**

ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அவர்கள் எனது உறவினர்கள் ஆவார். நான் போலிசார் விசாரணையின் போது கடந்த 22.07.2020 தேதி மாலை 4.30 மணியளவில் மேலஉரப்பனுர் மந்தையில் அ.சா.1 உட்கார்ந்திருந்த போது எதிரிகள் இருவரும் அவரை தகாத வார்த்தைகளால் பேசி தாக்கி காயத்தை ஏற்படுத்திவிட்டு கொலை மிரட்டல்

விடுத்தார்கள் என்று போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகள் எனது உறவினர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் கு.வி,**இல்லை